## ஆன்மிக நாட்டமும் மனித நேயமும் மிக்க அதிசய மருத்துவர்

அதிகாலைப் பொழுது. சென்னை மயிலாப்பூரில் ஒரு முக்கிய சாலை. சாலையின் ஓரமாக இடைவெளிவிட்டு சிறுசிறு கும்பல்களாகத் தாய்மார்களும் வயதில் பெரிய ஆண்களும் யார் வரவுக்காகவோ காத்திருப்பதுபோல் நின்றுகொண்டிருக்கிறார்கள். தாய்மார் சிலர் இடுப்பில் சிறு குழந்தையுடனும், வேறு சிலர் கைப்பிடியில் சிறுவர் சிறுமியருடனும் காணப்படுகின்றனர். ஆண்கள் துண்டால் உச்சந் தலையைப் பாதுகாத்துக்கொண்டு முகத்தை மட்டும் வெளியே தெரியும்படி நிற்கின்றனர். அக்காட்சி மிகவும் விசித்திரமாகத் தோன்றுகிறது.

சிறிது நேரத்தில், அங்கு. கழுத்தில் உடல் நிலையைப் பரிசோதிக்க உதவும் ஸ்டெதாஸ்கோப்பை மாலையாகத் தரித்த ஒரு கனவான் எதிர்ப்படுகிறார் முகத்தில் புன்னகை தவழ அவர் அச்சிறு கும்பல்களை நெருங்கிச் சென்று, ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைத்து நலம் விசாரிக்கிறார். அவரவரும் தத்தம் பிரச்சினைகளைக் கூறவும், அவர் த்மது ஸ்டெதாஸ் கோப்பால் குழந்தைகளையும் உடல் நலமற்றிருக்கும் பெரியவர்களையும் நிதானமாகப் பரிசோதிக்கிறார். பிறகு, தமது கோட்டுப் பையில் கையைவிட்டு ஒரு சிறு பெட்டியை வெளியே எடுக்கிறார். அதனுள் விதவிதமான மாத்திரை களும் சிறு பொட்டலங்களும் சிறிய குப்பிகளும் நிரம்பியுள்ளன. அந்த கனவான் அவற்றைத் தேர்ந்தெடுத்து அனைவருக்கும் வினியோகித்து விட்டு, மறுநாள் குறிப்பிட்ட நேரத்தில் தம்மை வந்து பார்க்குமாறு கூறி, விடை பெறுகிறார்.

காலை நேர நடையின்போதுகூட மிகுந்த பரிவுடன் நோயாளிகளைப் பரிசோதிக்கும் அந்த அதிசய மனிதர், **டாக்டர் எம்.ஸி. நஞ்சுண்ட ராவ்.** ஏழை எளிய மக்கள் என்றால் அவர்களிடம் கட்டணம் ஏதும் பெறாமலேயே சிகிச்சை அளிப்பது அவர் வழக்கம். அப்படிப்பட்டவர்களுக்கு இலவசமாக உரிய மருந்துகளை வழங்குவதோடு சிறிதும் வசதியில்லாதவர்கள் என்றால் சத்தான உணவு உண்ணவும் விலை உயர்ந்த மருந்துகளை வாங்குவதற்கும் பணம் கொடுப்பதற்குக் கூட அவர் தவறுவதில்லை! அந்த அளவுக்கு சக மனிதர்களின் மீதான அபிமானம் அவரிடம் ஆழப்பதிந்திருந்தது.

முன்பிருந்த மைசூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த நஞ்சன்கோடு என்ற சிற்றூர் தான் டாக்டர் நஞ்சுண்ட ராவின் பூர்வீகம். பொருளாதாரத்தில் மிகவும் சாதாரண நிலையில் உள்ள குடும்பத்ததில் 1862 ஆம் ஆண்டு பிறந்தார், நஞ்சுண்ட ராவ். இளம் நஞ்சுண்ட ராவ் படிப்பில் மிகவும் சூட்டிகையாக இருந்ததால் அவரது கல்விக்கு மைசூர் சமஸ்தான அரசே உதவியது. பங்களூர்

மத்திய கல்லூரியில் வேதியியலில் பட்டம் பெற்ற அவர், மக்களின் பிணிகளைத் தீர்க்க வேண்டும் என்ற ஆர்வம் காரணமாக மருத்துவம் பயில விரும்பினார். அப்போது சென்னையில்தான் மருத்துவக் கல்லூரி இருந்தது. அதில் பயிலவும் மைசூர் சமஸ்தான அரசு அவருக்கு உபகாரச் சம்பளம் அளித்து ஊக்குவித்தது.

மருத்துவத்தில் பட்டம் பெற்ற ராவ், தமக்கு மருத்துவக் கல்வி வழங்கிய சென்னையின் மக்களுக்கே அதன் பயனை வழங்குவதுதான் முறை என முடிவு செய்து, சென்னையிலேயே நடுத்தர மக்கள் அதிக அளவில் வசிக்கும் மயிலாப்பூர் கச்சேரி சாலையில் தமது மருத்துவத் தொழிலைத் தொடங்கினார். மிகவும் திறமையாக நோய்களைக் கண்டறிந்து தக்க சிகிச்சை அளிப்பதில் அவர் சிறந்து விளங்கியதால் வெகு விரைவில் பிரபலமடைந்துவிட்டார். பெரும் செல்வந்தர்களும், ஜமீந்தார்களும், சென்னை ராஜதானி அரசு உயர் அதிகாரிகளும் ஆங்கிலேய துரைமார்களும் அவரைத் தம் குடும்ப டாக்டராக நியமித்துக் கொள்வதில் பெருமைப்பட்டனர். அவரது திறமையினை அறிந்த மைசூர் சமஸ்தானம், அவரை ஆஸ்தான மருத்துவராக நியமிக்க விரும்பியது. ஆனால் தேவைப்படும்போது அரச குடும்பத்தினருக்கும் பிரதானியருக்கும் மருத்துவம் பார்ப்பதாக ஒப்புக்கொண்டு சென்னையில் தொடர்ந்து பணி செய்ய விரும்புவதாகத் தெரிவித்தார், ராவ். மைசூர் சமஸ்தான அரசின் உதவியுடன் படித்ததால் அவர் மைசூர் சமஸ்தானத்தில்தான் பணியாற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. உடனே நஞ்சுண்ட ராவ் தாம் பெற்ற உபகாரச் சம்பளம் முழுவதையும் நன்றியுடன் மைசூர் சமஸ்தான அரசுக்குத் திருப்பிக் கொடுத்து விட்டார்.

மேற்கத்திய அல்லோபதி மருத்துவம் பயின்ற ராவ், நமது மண்ணுக்கே உரித்தான ஆயுர் வேத மருத்துவ முறைகளையும் இணைத்து சிகிச்சை அளித்து வந்தார். மேலும் தாமே சில மருந்துகளையும் தயாரித்து நோய்களை குணப்படுத்தினார். இதனால் அவர் புகழ் பரவி, பொருளும் குவிந்தது. அதனை சுய நலத்துடன் தாமே அனுபவிக்காமல் பல சமூக நலப் பணிகளுக்கும் சமய நற்பணிகளுக்கும் வழங்குவதில் இன்புற்றார்.

டாகடர் ராவ் சென்னை அரசாங்க வேதியல் ஆய்வுக் கூடத்தில் பரிசோத கராகவும் பணியாற்றி வந்தார். அது பிரிட்டிஷ் ஆட்சிக் காலம். எனினும் டாக்டர் ராவ் சிறிதும் தயக்கமின்றி தேச விடுதலைக்காகப் போராடி வந்த தலைவர்கள் பலரையும் தமது இல்லத்திற்கு அழைத்து உபசரித்து நட்பு பாராட்டி வந்தார். பால கங்காதர திலகர், விபின் சந்திர பால் முதலான மூத்த தலைமுறை தேசியவாதிகள் சென்னை வருகையில் அவரது சசி விலாஸ் இல்லத்தில்தான் தங்குவர். புரட்சி வீரர் வ.வே.சு. ஐயர், மகாகவி சுப்பிரமணீய பாரதியார் போன்றவர்களுடனும் நெருங்கிப் பழகினார், ராவ். ஆங்கிலத்தில்

'பாலபாரதா' என்ற இதழைத் தொடங்கி பாரதியாரை அதன் ஆசிரியர் பதவியில் அமர்த்தினார்.

டாக்டர் ராவ் நுண்கலைகளின் புரவலராகவும் விளங்கினார். கலையம்சம் மிக்க பிரமாண்ட பங்களாகளைக் கட்டுவிப்பதில் அவருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. அவர் கட்டுவித்த கட்டிடங்கள் யாவும் உடனே அடையாளம் காணத்தக்க வகையில் ஒரே பாணியில் சிவப்பு நிறப் பூச்சுடன் மிளிர்ந்தன. பார்க்கிறவர்கள் அனைவரும், 'ஓ, இது டாக்டர் நஞ்சுண்ட ராவ் கட்டியது' என்று பார்த்த மாத்திரத்தில் கூறிவிடுவார்கள். பாரதியார் தமது இறுதிக் காலத்தில் சென்னை திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோவில் தெருவில் வசித்த செந்நிற வீடும் டாக்டர் ராவ் கட்டியதுதான்.

டாக்டர் நஞ்சுண்ட ராவ் ஆன்மிக நாட்டம் மிகுந்தவராகவும் இருந்தார். சுவாமி விவேகானந்தர் முதல் முறையாக 1893-ல் சென்னைக்கு வந்தபோது அவரது சிறப்பை அடையாளம் கண்டுகொண்டு அவருடைய முதல் வரிசைச் சீடராக முன்னின்றார். விவேகானந்தரைத் தமது இல்லலத்திற்கு வரவழைத்து உபசரித்தார். விவேகானந்தர் அமெரிக்கா சென்ற பிறகும், ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தபோதும் டாக்டர் ராவுடன் தொடர்ந்து தகவல் பரிமாற்றம் செய்து வந்தார். சென்னை திரும்பியபின், சென்னையில் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் அமைவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் டாக்டர் ராவிடம் கேட்டுக் கொண்டார். சென்னை மயிலாப்பூரில் தற்சமயம் செயல்பட்டுவரும் ஸ்ரீ ரமகிருஷ்ண மடம் அங்கு அமைவதற்குப் பெரிதும் காரணமாக இருந்தவர் டாக்டர் நஞ்சுண்ட ராவ்.

ஒருமுறை டாக்டர் ராவ் கோமளீஸ்வரன்பேட்டை மடத்தின் அதிபராக இருந்த அருணாசல சிவாசாரியாருக்கு சிகிச்சை அளிக்கச் சென்றபோதுதான் முதல் முறையாக ஸ்ரீ சக்கரை அம்மாவைப் பற்றிக் கேள்விப்பட்டார். அருணாசல சிவாசாரியார் அம்மாவின் சகோதரரும் ஆவார் அச்சமயம் ஸ்ரீ சக்கரை அம்மா முற்றிலும் ஆன்மிக முதிர்ச்சியடைந்து, பேரானந்த நிலையிலேயே மூழ்கித் திளைக்கும் பக்குவமடைந்துவிட்டிருந்தார். அதன் விளைவாக அடிக்கடி உரத்த குரலில் சிரித்துக் கொண்டிருந்தார். வீட்டில் இருப்பவர்கள் அம்மாவின் நிலையை உணரவில்லை. இளம் வயதிலேயே கணவரை இழந்த அதிர்ச்சியில் அவருக்கு புத்தி பேதலித்து விட்டதாகவே எண்ணி வந்தனர். டாக்டர் ராவ் அருணாசல சிவாசாரியாரைப் பரிசோதித்துக் கொண்டிருக்கையில் மாடியிலிருந்து பெரும் சிரிப்பபுச் சத்தம் கேட்டது. அது பற்றி டாக்டர் ராவ் விசாரித்தபோது, மாடியில் ஒரு பைத்தியம் பிடித்த பெண்மணி இருப்பதாகவும் அவர்தான் திடீர் திடீரென அர்த்தமில்லாமல் உரக்கச் சிரிப்பதாகவும் கூறினர்.

அதன்பின் கோமளீஸ்வரன்பேட்டைக்கு வரும்போதெல்லாம் டாக்டர் ராவ் சில சமயங்களில் ஸ்ரீ சக்கரை அம்மா கோமளீஸ்வரர் ஆலய கோபுர வாசலில்

தரையில் அமர்ந்து வருவோர் போவோரையெல்லாம் பார்த்துச் சிரிப்பதைக் கண்டார். முதலில் அவரும் அம்மாவை ஒரு பைத்தியம் என்றே எண்ணினார். அதன்பின் இயற்கையாகவே அவருக்கு இருந்த மனிதாபிமானம் காரணமாக வும் ஆர்வத்தாலும் அம்மாவை அணுகிப் பேச்சுக் கொடுக்கலானார். எதற்காக இப்படி அடிக்கடி பெரிதாகச் சிரிக்கிறீர்கள் என்று கேட்டபோது, சதாசர்வ காலமும் ஆனந்தப் பெரு வெள்ளத்தில் மூழ்கித் திளைப்பதுதான் ஆன்மாவின் இயல்பு. வாழ்க்கையில் எதிர்ப்படும் இன்பமோ துன்பமோ ஸ்தூல, சூட்சும உடம்புகளை மட்டுமே பாதிக்கின்றன. உள்ளுறையும் ஆன்மாவை அவை தொடுவதில்லை. இதை உணர்ந்து அனைவரும் எந்நேரமும் ஆனந்தப்பட்டுக் கொண்டிருப்பதற்குப் பதிலாக  இன்பம் வரும்போது மகிழ்வதும் துன்பம் நேர்கையில் வேதனைப் படுவதுமாக இருப்பதைப் பார்த்துத் தனக்கு அடக்கமாட்டாமல் சிரிப்பு வருவதாக அம்மா கூறினார். அதைக் கேட்ட அக்கணமே அமாவின் பெருமையினை டாக்டர் ராவ் உணர்ந்து அவரையே தமது குருவாக வரித்துக் கொண்டார். ஸ்ரீ சக்கரை அம்மா எழுத்தறிவில்லாத ஓர் ஏழை எளிய பிராமண விதவையாக இருந்தபோதிலும் டாக்டர் ராவ் சிறிதும் தயங்காமல் அவரே தமது குரு என்று எங்கும் பகிரங்கமாக அறிவிக்கலானார். ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் பேருரையாற்ற அழைக்கப் பட்டபோது அங்கும் அம்மாவின் ஆன்மிகச் சிறப்பினை பிரகடனம் செய்தார்.

ஸ்ரீ அம்மாவிடம் நெருங்கிப் பழகிய டாக்டர் ராவ், அம்மா ஸ்ரீ சக்கர உபாசனை செய்தவர் எனத் தெரிந்துகொண்டார். அது முதல், அவரை ஸ்ரீ சக்கரத்தம்மா என்றே அழைக்கலானார். ஆனால் அது மக்கள் மொழியில் சக்கரை அம்மா என மருவியது. அம்மாவின் இயல்பிற்கு அதுவும் பொருத்தமாக் இருப்பதாக உணர்ந்த டாக்டர் ராவ், தாமும் சக்கரை அம்மா என்றே அம்மாவை அழைக்கலானார். ஆன்மிக நாட்டமுள்ள ராவ் புனிதத் தலங்களுக்கு யாத்திரை செல்கையில் எல்லாம் அம்மாவையும் தம்முடன் அழைத்துச் செல்லும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார்.

1901-ல் அம்மா விரைவில் தனது ஸ்தூல உடலைத் துறந்துவிடப் போவதாக அறிவித்தபோது டாக்டர் ராவ் அதை அவ்வளவாகப் பொருட் படுத்தவில்லை. எங்களையெல்லாம் விட்டு அதெப்படி அவ்வளவு சீக்கிரம் போய்விடுவீர்கள் என்று விளையாட்டாகக் கேட்டார். ஆனால் ஸ்ரீ சக்கரை அம்மா மெய்யாகவே 1901 பிரவரி 28 அன்று தனது ஸ்தூல சரீரத்தைவிட்டு வெளியேறியபோது டாக்டர் ராவ் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தார். ஒருவாறு தம்மைத் தேற்றிக்கொண்டு அம்மாவின் உடலை ஊர்வலமாக எடுத்துச் சென்று, திருவான்மியூரில் தாம் வாங்கி வைத்திருந்த நிலத்தில் அடக்கம் செய்து சமாதி எழுப்பி அதன் மீது அழகானதொரு சிறு ஆலயமும் கட்டுவித்தார். ஆலாயம் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்றுவரும்பொருட்டு ஓர் அறக் கட்டளையினையும் நிறுவினார்.

டாக்டர் நஞ்சுண்ட ராவ் தமது வாழ்நாள் முழுவதும் பொது நலப் பணிகளிலும் மருத்துவத் துறையிலும் மிகத் தீவிரமாக இயங்கி வந்ததால் விரைவில் அவரது உடல் நிலை சீர்கெட்டது. அதைப் பொருட்படுத்தாமல் அவர் தமது பணிகளை சலிப்பின்றித் தொடர்ந்தார். அதன் விளைவாக அவர் முற்றிலும் உடல் நலங்கெட்டு. 1921 ஜனவரி 4 ஆம் தேதி காலமானார்.

டாக்டர் ராவ் தம் உளமார உடல் பொருள் ஆவி என அனைத்தையும் ஸ்ரீ சக்கரை அம்மாவிடம் ஒப்படைத்துவிட்டிருந்ததாலும், அம்மாவும் தனது பிரதான சீடரான அவரிடம் மிகுந்த பரிவு காட்டி வந்ததாலும், டாக்டர் நஞ்சுண்ட ராவின் உடலும் அம்மாவின் ஆலயத்தில், அவரது கருவறைக்கு அருகாமையில் அடக்கம் செய்யப்பட்டு அதன்மீது அவரது மார்பளவுச் சிலையும் நிறுவப்பட்டது.

ஆகவே டாக்டர் நஞ்சுண்ட ராவ் தமக்கு மிகவும் பிரியமான இடத்தில் ஸ்ரீ சக்கரை அம்மாவுடைய திருவடி நிழலின் பேரானந்தத்தில் திளைத்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

**+++**                                   .

.